புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை
***

எண்: 04/TD/DTC/PA/2015

புதுச்சேரி, தேதி: 24.07.2015

செய்திக் குறிப்பு

வாகன நம்பர் பிளேட்டில் பதிவு எண் தவிர வேறு ஏதும் எழுதக்கூடாது

மோட்டார் வாகனங்களுக்கான மத்திய மோட்டார் வாகன விதி எண்.50ன்படி அனைத்து வாகனங்களுக்கும் (நம்பர் பிளேட்) பதிவெண் பலகை தொடர்பான கீழ்க்கண்ட விபரங்கள் பொதுமக்களின் கவனத்திற்கு தெரிவிக்கப்படுகிறது.

1. வாகனங்களில் பொருத்தப்படும் நம்பர் பிளேட்களில் வாகன பதிவு எண்ணைத் தவிர வேறு எந்த விபரமும் எழுதுவதற்கு மோட்டார் வாகனச் சட்டத்தில் அனுமதி இல்லை.

2. நம்பர் பிளேட்டில் எழுத்துக்கள் எழுதுவது ஆங்கில மொழியிலும், நம்பர் அரபிக் எண்ணிலும் எழுதப்பட வேண்டும்.

3. போக்குவரத்து வாகனங்களுக்கு மஞ்சள் நிற பலகையில் கருப்பு நிற எழுத்தில் எழுதப்பட வேண்டும். மற்ற வாகனங்களுக்கு வெண்மை நிற பலகையில் கருப்பு நிற எழுத்தில் எழுதப்பட வேண்டும். இவை தவிர, வேறு வண்ணங்களில் நம்பர் பிளேட் பயன்படுத்த பொது மக்களுக்கு அனுமதி இல்லை.

4. நம்பர் பிளேட்களில் பெயர், படம் மற்றும் Government of India, Government of Puducherry Puducherry State, Officer, Doctor, Advocate, Police, Army, Ex-Servicemen என்று எழுதுவது மோட்டார் வாகனச் சட்டப்படி குற்றம் ஆகும்.

5. அனைத்து வாகனங்களுக்கும் உயர் பாதுகாப்பு பதிவெண் பலகை (HSRP நம்பர் பிளேட்டுகளை) போக்குவரத்துத் துறை அலுவலகத்திற்கு வந்து பொருத்திக்கொள்ள வேண்டும். HSRP நம்பர் பிளேட் போல போலியான நம்பர் பிளேட் பொருத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

அனைத்து வாகன உரிமையாளர்களும் மோட்டார் வாகனச் சட்டத்திற்கு மாறான மேற்படி தவறுகளைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த அறிவிப்புக்கு பின்னரும் இது போன்ற தவறுகள் தொடருமானால் மோட்டார் வாகனச் சட்டப்படி தொடர்புடைய வாகன உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை புதுச்சேரி போக்குவரத்துத் துறை தெரிவித்துக்கொள்கிறது.

GOVT OF PONDICHERRY
TRANSPORT DEPARTMENT

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்